# யாழ்/உயரப்புலம் மெதடிஸ் மிசன் வித்தியாலயம்

## பரிசில் தினம்-2016



0766128747~~9~~2

# பாடசாலை இலட்சனை

Esd.1876

வித்தியாலயம்

சிந்தனை விருட்சமாகுக

## துரநோக்கு

மாறிவரும் புதிய உலகத்தின் சவால்களை எதிர் கொள்ளும் வகையில், மாணவர்களின் உள்ளார்ந்த ஆற்றல்களை விருத்தி செய்து,சமூக இயைபாக்கமுடையவர்களாக வளர்த்தெடுத்து, புதிய சமுதாயத்தை உருவாக்குதல்.

## பணிக்கூற்று

கல்வியின் தேசிய சர்வதேச இலக்குகளிற்கு இசைவாக, பள்ளிமாணவர்களது இயலுமை,இயலாமை என்பவற்றை இனங்கண்டு,பொருத்தமான கற்றல் கற்பித்தல் கருமத் தொடரை முன்னெடுத்தல்.

# பரிசுத் தினம் - 2016

# நிகழ்ச்சி நிரல்

- ☞ விருந்தினர்களை வரவேற்றல்
- ☞ கொடியேற்றல்
- ☞ மங்கல விளக்கேற்றல்
- ☞ இறைவணக்கம் - இந்து, கிறிஸ்தவம்
- ☞ வரவேற்புரை
- ☞ வரவேற்பு நடனம்
- ☞ ஆசியுரை
- ☞ அதிபரின் பரிசுத்தின அறிக்கை
- ☞ பிரதம விருந்தினர் உரை
- ☞ சிறப்பு விருந்தினர் உரை
- ☞ கௌரவ விருந்தினர்கள் உரை
- ☞ பரிசில் வழங்குதல்
- ☞ கலை நிகழ்வுகள்
- ☞ நன்றியுரை
- ☞ பாடசாலைக் கீதம்

# ஆசிச்செய்தி

உயரப்புலம் கிராம மக்களின் அறிவுப் பொக்கிசமாகத் திகழும் யாழ்/உயரப்புலம் மெதடிஸ் மிசன் தமிழ் கலவன் பாடசாலையின் இவ்வருடத்திற்கான பரிசுத் தின விழா மலருக்கு ஆசியுரை வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

யாழ்/உயரப்புலம் மெதடிஸ் மிசன் தமிழ் கலவன் பாடசாலையின் வளர்ச்சிக்காக தம்மையே அர்ப்பணித்து அரும்பணியாற்றிக் கொண்டிருக்கும் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக "இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்" பாடசாலையின் பரிசளிப்பு விழாவின் இன்றைய நாயகர்களான மாணவச் செல்வங்கள், எமது அன்னை பூமியின் நல்ல தலைவர்களாக உயர்வடைய வேண்டும் என வாழ்த்துவதுடன் இறைவனின் நல்லாசியும் கிடைக்க இறைவனை வேண்டுகின்றேன்.

உயரப்புலம் மெதடிஸ் மிசன் தமிழ் கலவன் பாடசாலையின் இவ்வருடத்திற்கான பரிசுத்தின விழா வெற்றிகரமாக அமைய வேண்டும் என இறைவனை பிரார்த்திப்பதுடன், பரிசுத்தின விழாவிலே பரிசில்களைப் பெறவுள்ள மாணவச் செல்வங்களுக்கு எமது ஆலயம் சார்ந்த நல்லாசிகளை வழங்குவதுடன், இவ்வருட பரிசுத்தின விழாவானது மென்மேலும் சிறப்பாக நடைபெற வீரமா பிடாரி அம்பாளின் நல்லாசிகளும் உரித்தாகட்டும்.

**பிரம்ம ஸ்ரீ சோ.முரளீதரசர்மா**
ஆலய குரு
ஸ்ரீ வீரமாபிடாரிஅம்பாள் தேவஸ்தானம்
ஆனைக்கோட்டை

# ஆசிச்செய்தி

யாழ் / உயரப்புலம் மெதடிஸ் மிசன் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் வெளியிடும் மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இப்பாடசாலை இக்கிராமத்தையும் இதனைச் சூழவுள்ள கிராமங் களில் வாழும் பிள்ளைகளுக்கு பெருவிருட்சமாக இருந்து அறிவு என்னும் நிழலைக் கொடுத்து மேம்படுத்தியது வெளிப்படை. எங்கள் சமூக வரலாற்றில் சமூக அசைவின் இன்றியமையாத கருவி யாக கல்வியும், அதன் நிலைக்களங்களாக கிராமத்து கல்விச்சாலை களும் விளங்குகின்றது.

இவ்வாறாகப் பல புகழ் பூத்த வரலாற்றைக் கொண்ட பாடசாலையின் கல்விப்பணியின் பெருமையினை கொண்டாடும் பரிசளிப்பு நாளில் தமது நற் சேவையால் பாடசாலையின் தொடர்ச் சியை காத்து நின்ற பாடசாலை சமூகத்தினர் போற்றுதலுக் குரியவர்கள்.

கல்வியழகே அழகு என்பதும் "கசடறக்கற்க" என்பதும் பெரியோர்கள் காட்டிய அருள் வழிகாட்டிகளாகும். இன்று பரிசில்களைப் பெறும் அன்பு மாணவச் செல்வங்களுக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். ஏனைய மாணவர் களுக்கும் இந்நிகழ்வு உத்வேகத்தை கொடுக்கும். உங்கள் அனை வரையும் இறைவன் ஆசீர்வதிப்பாராக. பரிசளிப்பு நாள் பெருமை யினைக் காணும் பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றோர் அனைவருக்கும் என் அன்பு வாழ்த்துக்கள்.

யாழ் / உயரப்புலம் மெதடிஸ்மிசன் தமிழ் கலவன் பாடசாலையின் பணிகள் மென்மேலும் வளர்ச்சியடைய எல்லாம் வல்ல இறைவனின் நல் ஆசிகளை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**அருட்திரு.T. H.வசந்தகுமார்**
தென்னிந்திய திருச்சபை
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்

# வித்தியாலய ஆசிரியர்குழாம்-2016



# வித்தியாலய முதல்வரின் பரிசுத்தின அறிக்கை



பரிசுத் தினம் - 2016

யா/உயரப்புலம் மெ.மி.த்.க.பாடசாலை

❖எல்லாம் வல்ல இறைவனின் பாதார விந்தங்களை வணங்கி ஆசிவேண்டி நிற்கின்றேன்.

❖ஆத்மீகத்தில் அளப்பரிய சேவையாற்றி வரும் மதகுருமார்களே!

❖எமது கௌரவத்திற்கும் பெருமதிப்புக்குமுரிய முதன்மை விருந்தினர் அவர்களே!

❖எமது அன்பிற்கும் மதிப்பிற்குரிய சிறப்பு விருந்தினர் அவர்களே!

❖எமது ஆசிரிய குழாத்தில் முன்நாளில் இணைந்திருந்த கௌரவ விருந்தினர்களே!

❖உதவிக்கல்விப் பணிப்பாளர்களே!

❖சேவைக் கால ஆசிரிய ஆலோசகர்களே!

❖அபிவிருத்திச் சங்க நண்பர்களே!

❖எம்மோடு கரம் கோர்த்து நிற்கும் பழைய மாணவர் சங்க உறுப்பினர்களே!பழைய மாணவர்களே!

❖அயற்பாடசாலைகளின் அதிபர்களே! ஆசிரியர்களே!

❖முன்பள்ளி ஆசிரியர்களே!

உங்கள் அனைவருக்கும் எனது கனிவான வணக்கங்கள் உரித்தாகட்டும்.

உங்கள் அனைவரையும் மன நிறைவோடு வரவேற்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த வருடத்திற்கான பரிசுத்தினம் சிறப்பாக அமைய இறையாசி எமது பக்கமுள்ளது என மகிழ்ச்சி அடைகின்றோம்.

பெருமதிப்புக்கும் கௌரவத்திற்கும் உரிய முதன்மை விருந்தினர் அவர்களே!

எமது அன்பிற்கும் மதிப்புக்குமுரிய சிறப்பு விருந்தினர்களே!

கௌரவ விருந்தினர்களாக வருகை தந்திருக்கும் முன்னைய நாள் ஆசிரிய உறவுகளே!

உங்கள் அனைவரையும் அளவற்ற அன்புடனும் ஆனந்தப் பெருக்குடனும் உங்கள் இன்முகம் நோக்கி இருகரம் குவித்து வரவேற்கின்றேன்

**எங்கள் பெருமதிப்பிற்கும் அன்பிற்குமுரிய எமது முதன்மை விருந்தினர்**
(இடர் முகாமைத்துவப் பணிப்பாளர் யாழ்ப்பாண மாவட்டம்)

**திரு. ச. ரவி அவர்களே !**



உயர்திரு சங்கரப்பிள்ளை ரவி அவர்கள் 1975-07-30 ஆம் திகதி பிறந்தார். இவர் ஆரம்பக்கல்வியை மு/புதுக்குடியிருப்பு சுப்பிரமணிய வித்தியாசயலை, யா/ சென்சாள்ஸ் மகா வித்தியாலயத்திலும் ,க.பொ.த. சாதாரணம், க.பொ.த உயர்தரக் கல்வியினை மு/புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்திலும் (தற்போதய பெயர் மு/ புது-க்குடியிருப்பு மத்திய கல்லூரி) பயின்றதுடன் 1995 இல் மாவட்ட மட்டத்தில் கலைப்பிரிவில் முதன் நிலை மாணவனாக சித்தியெய்தி உயர் கல்விக்காக தெரிவானார். இளநிலை பட்டப் படிப்பினை யாழ்ப் பாணப் பல்கலைக் கழகத்தின் புவியியற்துறையிலும், இயற்கை வள முகாமைத்துவ பட்டப்பின் படிப்பினை பேராதனை பல்கலைக்கழகத் திலும், நிர்வாக முகாமைத்துவத்தின் பட்டப்பின் படிப்பினை இலண்டன் தொழில் நுட்பக் கல்லூரியிலும், முது நிர்வாக முகாமைத்துவ பட்டத் தினை பிரித்தானியாவின் வேல்ஸ்லம்பிட்டர் பல்கலைக்கழகத்திலும், அத்துடன் துறைசார் பயிற்சிக் கற்கைகளை அவுஸ்திரியாவின் சல்ஸ் பேக் பல்கலைக்கழகம், நெதர்லாந்தின் லிஜி பல்கலைக்கழகம், ஹவாயில் பரிபுரண நெருக்குதல் முகாமைத்துவ பயிறசிகளையும், மாலைதீவில் சூழற் தொகுதி மற்றும் ஆபத்து குறைப்பு செயற்பாடும் நிலைத்து நிற்கும் அபிவிருத்தியும், தாய்லாந்தில் ஆபத்து முகாமைத்துவமும், புவி இடஞ் சார் தொழிட்பமும் விஞ்ஞானத்தின் பிரயோகமும், இந்தியாவின் புதுடெல்லி யில் அவசர முன்னெச்சரிக்கை மற்றும் பதிலிறுத்தல் தொடர்பான பயிற்சியும் பெற்றுள்ளதுடன், தற்போது யாழ் பல்கலையில் முதுதத்துவமானி கற்கை யினை "நகரதிட்டமிடல் மற்றும் முகமைத்துவத்திற்கான மாநகர தகவல் முறைமை" எனும் தலைப்பில் மேற்கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

தொழில்சார் செயற்பாடுகளாக 1993 ஆண்டு நடைபெற்ற வடக்கு கிழக்கு மாகாணத்தின் சுத்திகரிப்பு தொழிலாளர் மற்றும் சாதரண தொழிலாளர்கள் தெரிவிற்கான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி தெரி வாகியமையோடு சில காலதாமதங்களுடன் அச்சேவையில் 1997 ஆண்டு ஐப்பசி மாதம் 06ம் திகதி வரை புதுக்குடியிருப்பில் அமைந்திருந்த முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் கடமையாற்றி 1997-10-12ல்

யாழ் பல்கலைக்கழகத்தில் உயர்கல்வியைத் தொடர்வதற்காக இணைந்து 2001 இளநிலைப்பட்டத்தினை முடிவுறுத்தியுதோடு 2002ல் செப்ரம்பாவரை திருகோணமலையில் முகாமைத்துவ பயிற்சி திணைக் களத்தில் புவியியல் தகவல் முறைமைக்கான வளவாளராக கடமை யாற்றியதுடன், 2002ஐப்பசி தொடக்கம் 2003 ஐப்பசி வரை புவியற்துறை யில் புவியியற் தகவல் முறமை மற்றும் தொலையுணர்வுத் தொழில்நுட்ப பாடத்திற்கான கட்டுரையாசிரியராக கடமையாற்றியமை மட்டுமன்றி 2005 செப்ரம்பர் வரை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நிகோட் திட்டத் தினை நடைமுறைப்படுத்துவதற்கான உதவி திட்டமிடல் பணிப்பாளராக கடமையாற்றியதோடு, 2005 ஐப்பசி இருந்து 2006 நவம்பர் 6ம் திகதி வரை சுவிஸ் தொழிலாளர் நிறுவனத்தின் வடமாகாண நிகழ்சிதிட்டத்தின் பிரதி நிகழ்சித் திட்ட முகாமையாளராகவும் கடமையாற்றியிருந்தார். 2006-11-7ம் திகதி உயர்கல்விக்காக பிரித்தானியா சென்று 2010 ஐப்பசி மாதம் 25ம் திகதி நாடுதிரும்பியபின் IDM நிறுவனத்தின் முகாமைத்துவ பீடத்தின் தலைவராகவும், கல்வி செயற்திட்ட ஆலோசகராகவும் கடமையாற்றிய அதே வேளை யாழ்ப்பாண அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தில் ஆராட்சி உதவியாளராக கடமையாற்றியதோடு 2011-11-01ம் திகதியிலிருந்து யாழ் மாவட்டத்தின் அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளராக கடமையாற்றி வருகின்றார்.

சமூக செயற்பாட்டின் ஆர்வமானது அவரது பிண்ணணியில் தங்கியுள்ளமையினை தெளிவுபடுத்துகின்றது. .சிறு வயதில் தாயாரை இழந்ததுமட்டுமன்றி 1986 இல் சகோதரயையும் இழந்தார். தந்தை மற்றும் 5 சகோதராகளின் அற்பணிப்பு அன்பு அரவணைப்பிலும், ஆதர விலும் இளையவனாக வளர்ந்ததுவருவதுடன், 1986ஆண்டு சகோதரனின் இழப்புடன் யாழப்பாணம் பழையபுங்கா வீதி சுண்டுக்குளியில் சமூக சேவையாளரும், எழுத்தாளருமான உயர் திரு. யோசப் பாலா, உயர்திரு. தேவராஜன் மங்களா அவரின் தாயார், சகோதரர்கள் மற்றும் வணபிதா வின்சன்ட் பற்றிக் போன்றோர்களினால் உருவாக்கப்ட்டு நிர்வகிக்கப்பட்ட அமல அன்னை அன்பகம் எனும் இல்லத்தில் 1986-1987வரை வளர்ந்து நாட்டுச் சூழ்நிலை காரணமாக புதுக்குடியிருப்புக்குச் சென்று மீண்டும் 1990-1991 வரை இல்லத்தில் தங்கியிருந்தார். பல்கலைகழக கல்வி யினை கற்பதற்காக மீண்டும் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை யில் மேற்கொண்ட வேலையினை இரவுநேர வேலையாக மேற்கோள்ளும் நோக்கில் தனது இடமாற்ற நடவடிக்கைகள் பூரணப்படுத்தப்பட்டும் கை கூடியிருக்கவில்லை. .அதன்பின்பு வணபிதா ஜெயக்குமார் அவர்களால்

கியூடெக் நிறுவனத்தினூடாக வழங்கப்பட்ட உதவித் தொகை, பல் - கலைக்கழக துணைவேந்தர் நிதியம், பல்கலைக்கழ்க உதவிப்பணம், போன்றவற்றினைக் கொண்டு உயர் கல்வியினை பூரணப்படுத்தினார் அதுமட்டுமன்றி அவரால் உச்சரிக்கப்படுகின்ற முக்கியமானவிடயம் சமூக நிதி மற்றும் ஆதாரத்தில் முன்னேறியதனால் தான் ஓர் சமூகத்தின் சொத்து எனவே தன்னை சமூக மேம்பாட்டிற்கு உபயோகிப்பதே தனது அவாவும் கடமையும் எனக் கூறுவதுண்டு.

அவரது கொள்கை தூர இலக்காக இருப்பது ஓர் கல்வி சார் /அறிவியல் சார் நடவடிக்கைகளில் சமூக மேம்பாட்டிற்கான அர்பணிப்புக்களையும், ஒருங்கிணைப்புக்களையும் மேற்கோண்டு அவற்றினை செம்மையாக முன் னெடுப்பதற்காக 2006ம் ஆண்டு சமூக ஒருங்கிணைப்பு மற்றும் செயலாற்றுகை முகவர் (Friendly **A**ction for **S**ocial **I**ntegration **A**gency- **Friendly ASIA**) எனும் சமூக கூட்டுப்பொறுப்பு செயற்பாட்டினையும் CAMPS International எனும் ஆலோசனை மற்றும் பயிற்சி நிலையத்தை அமைத்து தொழில்வழிகாட்டல் தொழில்வாண்மைப்பபயிற்சி ஆராட்சி நடவடிக்கைகளை செயற்படுத்திவருவதோடு, யாழ்ப்பாண பல்கலைக் - கழக புவியியற் பட்டதாரிகளின் பழைய மாணவர் சங்கத்தின் ஸ்தாபக உறுப்பினராகவும், செயலாளராகவும் இருந்து புவியியற் கல்வியிலுள்ள ஆழமானபற்று இலட்சியம் சிந்தனைபோன்றவற்றிற்கு வடிவம் கொடுப் பதற்கான களமாகவும் செயலற்றுகைகளை நடைமுறைபடுத்து வருகின்றார். அத்துடன் அவரது மகுடவாசமாக

"தெரியாததைத் தெரிந்து கொள்வோம் தவறுகளைத் திருத்திக் கொள்வோம்" நேர்த்தியான மனப்பாஙகு அறிவு மற்றும் திறன்களின் தெளிவுடன் கூடிய நற்சமூக சிந்தனை, பாதுகாப்பானதும், சமாதான மானதும், மனிதநேயமுள்ளதும் ஆரோக்கியமானதுமான சமூகத்தை உருவாக்கும்.(ச.ரவி **CDMA2020).**

அத்தோடு உயர்திரு ச.ரவி அவர்கள் எப்போதும் வெஸ்ட்டில் (WEST **W**ork, **E**thics,**S**tudies ,& **T**alent )வெற்றி பெறுவதற்கான செயலமுறைகளை மேற் கொண்டுவருகின்றவர் புதியவிடயங்களை அறியவும் அறிந்தவற்றை அமுல்படுத்துவதிலும் ஆக்கபூர்வமான செயலாற்றுகைகளை மேற் கொள்பவராகவுமுள்ளார் அதன் ஓர் வெளிப்பாடாக குறித்தகாலப்பகுதிக்குள் நிலைத்துநிற்கும் அபிவிருத்தி இலக்கின் அடைவுகளை நிலைநிறுத்துவதற்காக "சமூக ஒருங்கிணைப்புக்கான செயலாற்றுகைகள் மற்றும் அடைவுகளுக்கான

கட்டமைப்பினூடாக (2015-2030) எமது பாடசாலையில் பல்வேறு சமூகக் கூட்டுப்பொறுப்பபு மற்றும் நலன்வரும்பிகளின் செயலாற்றுகை களை ஒருங்கிணைப்பதனூடாக நிலைத்துநிற்கும் அபிவிருத்தி இலக்கு களின் அடைவினைப் பிரதிபலிக்கின்ற மாதிரிப் பாடசாலையாக மாற்றவேண்டும் என்ற பேரார்வமும் நேரியசிந்தனையும் கொண்டுள்ளார். கல்வித்துறையின் பல்பரிமாண வளர்ச்சிப படியினநிலைகளூடாக ஏழைக்குழந்தைகளின் கல்வியினை உயர்த்தி சுயமீட்சித்திறனான சமுதாயத்தினையும் ஸ்த்திரமான நாட்டைக்கட்டியெழுப்பமுடியும் எனும் அசையாத நம்பிக்கையுடன் உதவிவரும் அதேவேளை தங்களின் கல்விசார் /அறிவியல் இலட்சியத்தொழிலினை தாங்கள் விரைவில் அடையவும் தங்களின் இவைபோன்ற அயராத அளப்பெரிய முயற்சிக்ள் கைகூடவும் நீடித்த ஆயுளுடன் மென்மேலும் சமூகப்பணிகளை திறம்பட முன்னெடுக்க அனைவரின் நல்லாசியும் ஒத்துழைப்பும் கிடைக்க இறையாசிவேண்டிவாழ்த்துகின்றோம்.

**எங்கள் பேரன்புக்குரிய சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக் - கும் திரு. பிரான்சிஸ் சேவியர் அன்ரன் (கோட்டக் கல்விப்பணிப்பாளர் - நல்லூர்) அவர்களே!**



தென்மராட்சி மிருசுவிலில் பிறந்தீர்கள். விளையும் பயிரை முளையில் தெரியும் என்ற வாக்கிற்கமைய துடிப்பான மாணவனாகத் திகழ்ந்தீர்கள். சென் ஜோசப் கல்லூரி - திருகோணமலை கல்வி பயின்று பல்வேறு கற்றல் செயற்பாடுகளில் கல்லூரிக்கு பெருமை சேர்த்த மாணவன் என்பது குறிப் பிடத்தக்க- தாகும்.

உயர்தரக்கல்வியினை யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரியில் கற்று இளமையிலேயே ஒழுக்கமுள்ள மாணவனாய் திகழ்ந்தீர்கள். யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் சிறப்புக் கலைப் பட்டதாரியாகிய தாங்கள் பட்டப்பின் கல்வி டிப்ளோமா (PGDE) கற்றுள்ளதுடன் முது நிலை தத்துவமானி (M. phil ) பட்டத்தோடு கலைமானி (M.A) திட்ட மிடல் பட்டத்தினையும் பெற்று சிறந்த கல்வியியலாளராக பிரகாசிப்பது எமக்கு மகிழ்ச்சி தரும் விடய மாகும். அத்துடன் ஆங்கில மொழி தேர்ச்சியும் பெற்றுள்ளீர்கள்.

எம் ஏழைக்குழந்தைகளுக்காய் நீங்கள் ஆற்றிய பணியை இறைவன் ஏற்றுக்கொண்டான். அதன் வழியாக பல பட்டங்களைப் பெற்றீர்கள் அதிபர்களுக்கான போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்று அதிபர் பயிற்சியில் சிறந்த அதிபர்களாய் திகழ்கின்றீர்கள் என்று பெருவுகை கொள்கின்றேன். உங்களை இந்தவேளையிலே வாழ்த்துவதுடன் நலிந்து போயுள்ள எமது சமூகத்திற்கு நல்ல வழிகாட்டிகளாகத் திகழ்வீர்கள் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

“தோன்றில் புகழோடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற் தோன்றாமை நன்று” என்பது வள்ளுவன் குறள் இதற்கமைய புகழோடு நல் மாணவர்களை உருவாக்கும் வழிகாட்டிகளாக நீங்கள் திகழ எனது நல்லாசிகளை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

**பாடசாலை வரலாறு**

எமது பாடசாலை மிக நீண்ட வரலாற்றைக் கொண்ட கல்விப் பாரம்பரியம் மிக்க ஓர் பாடசாலையாகும். 1876ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இன்னும் சில ஆண்டுகளில் 150வது வருடத்தை பூர்த்தி செய்யவுள்ளது. இது தரம் 1 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புகள் கொண்ட வகை இரண்டு பாடசாலையாகும். சிறந்த பௌதிக வளத்துடனும் துடிப்பு மிக்க ஆசிரிய வளத்துடனும் உழைப்பு மிக்க கல்விசாரா ஊழியர்களுடன் இணைந்த ஓர் வளர்ந்து வரும் பாடசாலையாகும். இங்கு கற்க வரும் மாணவர்கள் அநேகர் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பப் பின்னணியை சேர்ந்த ஆபத்து விளிம்பில் உள்ள மாணவர்கள் இவர்களின் குடும்ப பொருளாதார நலிவு காரணமாக வீடுகளில் சிறந்த கற்றல் சூழலை வழங்க முடியாத நிலை காணப்படுவதை பல் வேறு சந்தர்ப்பங்களில் எம்மால் இனங் காணக்கூடியதாக இருக்கின்றது. கற்றலுக்கு வறுமை ஒரு தடையாக இருக்கக்கூடாது என்ற நோக்கத்துடன் மாணவர்களின் கற்றல் தேவை கள் பூர்த்தி செய்யப்பட்டு சிறந்த கவின்நிலை ஏற்படுத்தப்பட்டு கற்றல் செயற்பாடுகள் முன்னெடுத்து செல்லப்படுகின்றது.

ஆரம்ப, இடைநிலை வகுப்புகளில் காணப்படும் எழுத வாசிக்கத் தெரியாத மாணவர்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு ஏற்றவிதத்தில் எளிய பயிற்சிகள் மூலம் மொழி அறிவு விருத்தி செய்ய அடிப்படையில் இருந்து கற்பித்தல் செயற்பாடுகள் விசேடமாக திட்டமிடப்பட்டு முன்னெடுக்கப்படுகின்றது.

வகுப்பறை கவின் நிலைகளை மேலும் வலுவூட்ட ஆரம்பப்பிரிவு வகுப்புகளுக்கு புலக்காட்சி இரசனைகளை வலுப்படுத்த சுவரொட்டிகள் பொருத்தமான முறையில் காட்சிப்படுத்தப்பட்டு இருக்கின்றது. இது சிறந்த கற்றல் சூழலுக்கு ஏதுவாகின்றது.

இத்துடன் மாணவர்களினால் அமைக்கப் பெற்ற ஆக்கச் செயற்பாடுகள், ஒப்படைகள் கொண்ட சுவரொட்டிகளின் காட்சிப்படுத்தல் கள் மாணவர்களுக்கு சிறந்த தன்னம்பிக்கை யை வளர்க்கின்றது. தரமான உள்ளீட்டுப் பொருட்களின் உச்சப் பயன்பாடும் ஆசிரிய வளத்தின் உச்சமான வேலைப்பகிர்வுகளின் மூலமும் அரச நிதிகள் பொருத்தமான வகை யில் பயன்படுத்தப்படுகின்றன. தரம் 5 , 10 மற்றும் தரம் 11 ஆகிய வகுப்புகளுக்கு வழமையான கற்றல், செயற்பாட்டுடன், மேலதிக வகுப்புகளின் மூலமும் கற்றல் செயற்பாடுகள் முன்னெடுக் கப்படுகின்றன. பெற்றோரின் விருப்பத்திற்கமைய தரம் 9 வகுப்பிற்கும் மேலதிக கற்றல் செயற்பாடுகள் முன்னெடுக் கப்படுவதற்கு திட்ட மிடப்பட்டுள்ளது. இது மட்டுமல்லாது திட்டமிட்டு ஒழுங்கமைக்கப் பெற்ற மாணவர் உயர்மட்ட செயற்றிட்டங்கள், பாசறை நிகழ்வுகள், கணித, சுற்றாடல் முகாங்கள், வளவாளர்களின் செயற்பாடுகள், கல்விச் சுற்றுலாக்கள் போன்றவையும் நன்கு திட்டமிட்டு செயற்படுத்துவதன் மூலம் கற்றலில் பல முன்னேற்றங்களை இப் பாடசாலை பெற்று வருவது மகிழ்ச்சியளிக்கின்றது.

**பௌதிக வளங்களின் அபிவிருத்தியும் கரங்கொடுப்போரும்**

எமது பாடசாலையின் பௌதிகவள அபிவிருத்தியிலும் மாணவர் தம் கல்வி அபிவிருத்தியிலும் எமக்கு உறுதுணை யாக நின்று கரம் கொடுக்கும் வடக்கு மாகாண கல்வி அமைச்சு, யாழ்ப்பாண கல்வித் திணைக்களம், நல்லூர்

கோட்டக்கல்வி அலுவலகம், கல்விசாரா உதவி நிறுவனங்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கம், பாடசாலை அபிவிருத்திக் குழு, ஆசிரியர் நலன் புரிக்கழகம், பழைய மாணவர் சங்கம், வெளிநாட்டு புலம் பெயர் பழைய மாணவர் சங்கம், நலன் விரும்பிகள் ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள்.

எமது பாடசாலையில் நடைபெறும் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி, பரிசளிப்பு விழா, ஆசிரியர் தின விழாக்கள் யாதாக இருப்பினும் மேற்படி சங்கங்களின் ஒத்துழைப்பு மிக முக்கியமான ஒன்றாக செயற்பட்டு வருகின்றது. பழைய மாணவர் சங்கத்தின் உயிரோட்டமான செயற்பாடுகளுக்கு முன்மாதிரியாக மாதாந்தக் கூட்டங்கள் கிரமமாக நடைபெறுவதுடன் பாடசாலை சமூக உறவுகள் சிறப்பாக பேணப்படுகின்றது.

புலம் பெயர் பழைய மாணவர் சங்க கனடாக் கிளை, லண்டன் கிளைகள் மூலம் Online மூலம் நேரடியாக கிளை சந்திப்புகள் நடை பெற்று பாடசாலையின் அபிவிருத்தித் தேவைகள் கேட்டறியப்பட்டு நிறைவு செய்யப்படுகின்றது.

பாடசாலையின் அதிபர், ஆசிரியர்களுக்கு அடுத்த படியாக பாடசாலையின் பௌதீக வளப் பாதுகாப்பு மற்றும் பயன்பாடுகளை செவ்வனே நிறைவேற்றும் பொறுப்பு வாய்ந்த வர்களாக மாணவத்தலைவர்கள் காணப்படுகின்றனர். மாணவர் களின் ஒழுக்க விழுமியங்களை செவ்வனே நெறிப்படுத்தும் செயற்றிறன் வாய்ந்தவர்களாக மிளிர்கின்றனர். வகுப்புத்தலை வர்களை கொண்டு வகுப்பறைச் செயற்பாடுகளை அவதானித் தல், தனியான வகுப்பறைக்கு செல்லும்போது ஒழுங்கான முறையில் (வரிசையாக)செல்லல். பாடசாலை நேரத்தில் வகுப்பறையை விட்டு வெளியே செல்லும் போது விசேடமான

ஒழுங்குமுறை போன்றவற்றின் மூலம் மாணவர்களின் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்தி பாடசாலையினது செயற்பாடுகளை மேலும் விருத்திசெய்ய உதவுகின்றது.

மாணவத்தலைவர்கள்,வகுப்புத்தலைவர்கள் ஏனைய மாணவர்களுக்கு முன்மாதிரியாகவும் பாடசாலை செயற்பாடுகளை முன்னெடுத்தல் தலைமை தாங்கும் பண்பை வளர்த்தல் அதிபர், ஆசிரியர்களுக்கு கீழ்ப்படிந்து பாடசாலையின் செயற்பாடுகளை முன்னெடுத்து செல்வது போன்ற செயற்பாடுகள் பாடசாலைக்கு மேலும்மெருகூட்டுகிறது.

இக்குழுவின் துரித செயற்பாடுகளின் காரணமாக பாடசாலையின் பௌதீக வளங்களில் விருத்தி ஏற்பட்டுள்ளது. அலுவலகம் 5S முறையில் நவீன முறைப்படுத்தப்பட்டது. இது மட்டும் அன்றி மரக்கறி தோட்டங்கள் அமைக்கப்பட்டதுடன் இனி வருங்காலங்களில் மாணவர்களின் மதிய உணவிற்குத் தேவையான மரக்கறிகளை இதிலிருந்தே முழுமையாக பெற்றுக் கொள்வது என தீர்மானிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

பாடசாலையின் பௌதிக நிலைகளில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் காரணமாக சிறந்த கவின் நிலை வளர்ச்சி பெற்று வருவது சிறப்பான எதிர்காலத்தை சுட்டி நிற்கின்றது. இணைபாடவிதான செயற்பாடுகளை நோக்கும் போது மிகப் பாரிய முன்னேற்றம் குறுகிய காலப்பகுதியில் ஏற்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருடா வருடம் நடைபெறும் பாடசாலை நிகழ்வுகளுக்கு அணிவகுப்பு செய்து விருந்தினரை வரவேற்று அழைத்துச் சென்று மரியாதை செலுத்தியது பாடசாலை வரலாற்றின் மைல்கல் ஆகும். இது மட்டுமல்லாது கோட்ட மட்ட, வலய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் எமது மாணவர்களுக்கு வழங்கப்பட்ட சிறப்பான

பயிற்சிகள் காரணமாக அதிக இடங்களைப் பெற முடிந் தது. இனிவரும் காலங்களிலும் மாணவர்களுக்கு சிறந்த விளையாட்டு வல்லுநர்கள் மூலம் பயிற்சி வழங்குவதற்குத் திட்டமிட்டுள்ளோம்.

இவ்வருடம் 1-5வகுப்பறைகளுக்கு வர்ணப்பூச்சு பூசப்பட்டது. அத்தோடு விஞ்ஞான ஆய்வு கூடத்துக்கு தள மேசை என்பன அமைக்கப்பட்டது.மேலும் இவ் வருடம் அபிவிருத்திக் குழுவின் முயற்சி மூலம் பாடசாலையில் தரம் - 1 மாணவர்களின் அனுமதி அதிகரித்துக் காணப்படுவதுடன் ஏனைய தரங்களிலும்மாணவர்களின் அனுமதிகள் அதிகரித்துச் செல்வது கண்கூடு.

இவ்வாறாக எமது அபிவிருத்திக் குழு மூலம் பாடசாலையின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள், பௌதிக வளத் தேவைகள் முன்னெடுத் துச் செல்லும் அதேவேளை இனித் தொடர்ந்து வருங்காலங்களிலும் பாடசாலையில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்களும் முன்மொழிவுகளும் மேற் கொள்ளப்பட்டு வருவது சிறந்த எதிர்காலத்தை ஏற்படுத்தும் என நம்புகின்றோம்.

கடந்த காலங்களில் எமது பாடசாலையினால் விளையாட்டுஆண்டு, கல்வியாண்டு என பிரகடனப்படுத்தப் பட்டது குறிப்பிடத்தக்கது. இவற்றில் தேர்ச்சி நிலையை பெறுவதற்காக பல முன்மொழிவுகள் நடைமுறைப் படுத்தப் பட்டு வெற்றி பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

கல்வியிலும் விளையாட்டிலும் முன்னேற்றங்களை கண்டுவரும் எமது பாடசாலை ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கும் வகையில் இந்த ஆண்டு ஒழுக்கம் நிறைந்த ஆண்டு எனப் பிரகடனப்படுத்தப்பட்டு ஏற்ற செயற்பாடுகள் முன்மொழியப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது.

**அதிபர், ஆசிரியர்களினால் முன்னெடுத்து வரும் செயற்பாடுகள்**

ஆசிரியர்கள் பெற்றோர்கள் சந்திப்பினூடாக கல்வியின் உன்னதத் தன்மையை பெற்றோர்களுக்கு உணரவைத்து பாரிய சிந்தனை மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளோம் என்பதனை இந்த அவையிலே காணக்கூடியதாகவுள்ளதை நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள். தங்களுடைய பிள்ளைகள் கல்வியின் அடைவுமட்டத்தில் வெற்றி பெற்று பரிசில்பெறுகின்றார்கள் என்பதைக் கண்டு கொள்ள ஆவலோடு சமூகம் தந்திருப்பது எமக்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றியாகும். நான் என்பது நாமாக மாறி கூடி உழைத்தால் நல்ல சமூகத்தை நாம் படைப்போம் என்கின்ற சிந்தனை எம்மவர்களிடம் துளிர்விட்டுப் பிரகாசிக்க தொடங்கிவிட்டது நாமும் வளமான மக்களே என உணர்வு மேலோங்கியுள்ளது ஒவ்வொரு பிள்ளைகளின் குடும்பப் பின்னணி பொருளாதார நிலைமைகள் தொடர்பாக மிக நுட்பமாக ஆய்வுகளை மேற்கொண்டோம் இதன் பயனாக கடந்த காலங்களிலும் இந்த ஆண்டிலும் சிறு சிறு உதவிகளைப் பெற்றுக் கொடுத்ததில் மகிழ்ச்சி அடைகின்றோம்.எமது பாடசாலைச் சமூகத்தைச் சூழவுள்ள பன்னிரண்டு முன்பள்ளிகளுக்குச் சென்று பெற்றோர்கள் ஆசிரியர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு கல்வி என்பது தரம் 1 இல் இருந்தே வளர்த் தெடுக்கப் படவேண்டும் என்ற அசைக்கமுடியாத கருத்துக்களை முன்நிலைப்படுத்தியதன் ஊடாக எமது வித்தியாலயத்தில் தரம் 1 இல் இணைந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கடந்த காலங்களிலும் சரி இந்த ஆண்டிலும் சரி நன்கு திட்டமிட்டு இலங்கைத் தீவின் முக்கியமான இடங்களை கல்விச் சுற்றுலாக்கள் மூலம் மாணவர்களுக்குக் காண்பித்து அறிவுசார் தேர்ச்சிகளை வளர்த்துக் கொள்வதுடன் ஆளுமை விருத்தியினை யும் வளர்த்துக்கொள்ள வழிவகுத்துக் கொடுத்துள்ளோம். இந்த ஆண்டிற்கான கல்விச் சுற்றுலாவில்பல மாணவர்கள் கலந்து கொண்டது மிகவும் சிறப்பானது. இதற்கு அனுசரணையாக யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் திரு.நா.வேதநாயகன் அவர்களும் அனர்த்த

முகாமைத்துவ பணிப்பாளரும் இன்றைய பிரதம விருந்தினருமான திரு. ச. ரவி அவர்களும் தமது அயராத முயற்சியினால் தனிப்பட்டவர்களிடம் நிறுவனங்களில் இருந்தும் நிதிவளங்களைப் பெற்றுத்தந்தார்கள். இதன் மூலமாக புத்தளம், கற்பிட்டி, சிலாபம், கொழும்பு, களுத்துறை, காலி ஆகிய இடங்களில் உள்ள கல்வியுடன் தொடர்புடைய பல்வேறு இடங்களைப் பார்வையிடக் கூடியதாக இருந்தது உதாரணமாக புத்தளம் நுரைச் சோலை, கொழும்புகோள் மண்டலம், அருங்காட்சி அகம், சீமெந்துச் தொழிற்சாலை உப்பளம் எனப் பல இடங்களைக் குறிப்பிடலாம்.

**ஒழுக்கமும் சிறந்த கல்வியும்**

ஒழுக்கக் கட்டுப்பாடு ஆன்மிகம்,நேரம் தவறாது வித்தியாலயத்திற்கு வருதல், பாடசாலை சீருடையில் நேர்த்தி , தூய்மை என்பவற்றை ஏற்படுத்தியுள்ளோம். இவற்றோடு அடுத்த நகர்வாக கல்வி சார் நடவடிக்கைகளை துரிதப்படுத்தி கல்வி ஆண்டாக பிரகடனப்படுத்தி அதற்கான வேலைத் திட்டங்களை முன்நகர்த்தியுள்ளோம். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மேலதிக வகுப்பக்கள் தரம் 10, 11 மாணவர் களுக்கான மேலதிக வகுப்புக்கள். நடத்துவதற்கு நன்கு திட்டமிடப்பட்ட நேர சூசிகைக்கு அமைவாக காலை, மாலை விடுமுறை நாட்கள் என ஆசிரியர்களின் பணி தொடர்கின்றது.இந்தியாவின் பெருந்தலைவர் காமராஜர் கூறுவது போல் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்லமுடியாத பள்ளி மாணவர்களுக்கு ஒரே வழிகாட்டி பள்ளி ஆசிரியர்களே இதனை நாம் சாதித்துக் காட்டியுள்ளோம். சென்ற ஆண்டிலும் இந்த ஆண்டிலும் க. பொ.த சாதாரண தரப் பரீட்சையில் அதிகப்படியான மாணவர்கள் சித்தியடைந்து க.பொ.த உயர் தரத்தில் பிரபலமான கல்லூரிகளில் கல்வி கற்று வருவது எமக்கு மகிழ்வு தரும் விடயமாகும்.

நீண்ட காலத்தின் பின்னர் சென்ற ஆண்டில் மாணவி செல்வி.கி.நிதுஷா புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து எமது பாடசாலைக்கு பெருமை சேர்த்துத்தந்தமை எமக்கு மகிழ்ச்சி தருகின்றது இதற்கு காரண கர்த்தாவாகத் திகழ்ந்தவர் எமது

முந்நாள் ஆசிரியரும் கௌரவ விருந்தினருமாகிய திரு.செ.ஜெயகாந்தனும் அவருடன் இணைந்த ஆரம்பக் கல்வி ஆசிரியர்களும் என்று கூறுவதில் பெருமை அடைகின்றோம்.

அதே போல் இந்த ஆண்டில் ஆங்கில உறுப்பெழுத்தில் செல்வி.ந. சுவி கோட்டமட்டத்தில் முதலிடத்தினையும் தமிழ் தினப் போட்டியிலே செல்வி.அ.ஜெமீமா தனிநடனத்தில் கோட்ட மட்டத்தில் 3ம் இடத்தினையும் பெற்றுள்ளமை மகிழ்ச்சி தருகின்ற விடயமாகும். இவர்களை மனதார வாழ்த்துகின்றேன்.

**விளையாட்டு தொடர்பான முன்னகர்வுகள்**

கடந்த நான்கு வருடங்களாக யாழ்ப்பாண வலயத் திலுள்ள வகை இரண்டு பாடசாலைகளில், கோட்டம், வலயம், மாகாணம், தேசியம் வரை சென்ற மாணவர்களின் எண்ணிக்கையில் வகை இரண்டு பாடசாலைகளில் நாம் முதல் நிலையில் உள்ளோம் என்பது பெருமைக்குரிய விடயமாகும் இந்த ஆண்டிலும் குறைந்த எண்ணிக்கையைக் கொண்ட மாணவர்களைக் கொண்ட எமது வித்தியாலயத்திலிருந்து கோட்ட மட்ட போட்டிகளில் 16 இடங்களைப் பெற்றுக் கொண்டுள்ளோம். வலய மட்ட போட்டிகளுக்கு முறையான பயிற்சி அளிக்க முடியாமல் போனது கவலை தரும் விடயமாகும். காரணம் கடும் வெப்பம் காரணமாக மாணவர்களுக்கான பயிற்சி அளிப்பது தடை செய்யப்பட்டிருந் தமையே ஆகும். இருந்தாலும் 4 இடங்களை வீராங்கனைகள் பெற்றுள்ளார்கள். இவர்கள் மாகாணத்தில் வெற்றியீட்டி தேசியம் செல்வார்கள் என்கின்ற அசைக்க முடியாத நம்பிக்கை எனக்குள்ளது ஏனென்றால் எமது ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையை நான் நன்கு அறிந்துள்ளேன்.

**யோகாசனப் பயிற்சி வகுப்புக்கள்**

மாணவர்களின் மன ஒருமைப்பாட்டை மேன்மையடையச் செய்யவும் இன்றைய காலகட்டத்தின் தேவையாக பல்வேறு தரப்பு அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் உணரப்பட்டதுமான யோகாசனம் முறையாக ஒரு வருடங்களுக்கு மேலாக திரு.ச.விமேஸ் (வேதாந்தமடம், திருநெல்வேலி) அவர்களால் ஒவ்வொரு புதன்

கிழமைகளிலும் காலை 6.45 மணிமுதல் காலை 8.00 வரை பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. இதற்கு ஆசிரியர்களின் ஒத்துழைப்பு மகிழ்ச்சி தரும் விடயமாகும்.

**பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவியோர்.**

புலம் பெயர் பழைய மாணவர் சங்கத்தின் உறுப்பினர் களும் இலங்கை வாழ் பழைய மாணவர் சங்க உறுப்பினர்களும் மற்றும் நலன் விரும்பிகளும் பல்வேறுபட்ட உதவிகளை எமது பாடசாலைக்கு புரிந்துள்ளார்கள்.

மாணவர்களின் குடும்பப் பின்னணி பொருளாதார ரீதியான இடர்பாடுகள் என்பனவற்றை தீர்க்கும் நோக்குடன் நலன் விரும்பிகளின் உதவியோடு பல செயற்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம். அந்த வகையில் அனர்த்த முகாமைத் துவப் பணிப்பாளரும் இன்றைய பிரதம விருந்தினருமாகிய திரு.ச.ரவி அவர்களின் ஏற்பாட்டில் நலன்விரும்பியும் கொடை வள்ளலுமாகிய கௌரவத்திற்குரிய கலாநிதி வைத்திலிங்கம் சிவராசா (சிவா ரேடிஸ் கம்பனி உரிமையாளர் STC) அவர்களினால் பாடசாலையிலுள்ள 80% ஆன மாணவர்களுக்கு சப்பாத்து, புத்தகப்பை, கொப்பிகள், கணித உபகரணங்கள், தொப்பி எனப் பல்வேறு கற்றல் உபகரணங்களை ஒரு லட்சத்து ஏழாயிரத்துக்கு மேற்பட்ட தொகைக்கு எமக்கு வழங்கியுள்ளார் அவருக்கும் இந்நேரத்தில் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்தோடு கணினி ஆய்வுகூடம் பாதுகாப்பற்ற நிலையில் இருந்த போது ஒரு லட்சம் செலவு செய்து 300 சதுர அடி யன்னல்களுக்கு பாதுகாப்பு வடிவமைத்து தந்த புலம் பெயர் பழைய மாணவர்களான சிவானந்தராசா சிவானந்தகுமார் (பிரான்ஸ்), சோமநாதன் சிறிகாந் (பிரான்ஸ்), மரிசிலீன் சுரேஸ் (பிரான்ஸ்), பேரின்பராஜா றெஜீஸ் (கனடா) இவர்களுக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

# ஆசிரியர் குழாம்

| இல | நிரந்தர ஆசிரியர் | பாடம்/பொறுப்புகள் |
|---|---|---|
| 1. | திரு.கா.ரவீந்திரராசா | அதிபர் |
| 2. | திருமதி.சி.நந்தகுமார் | பிரதி அதிபர் |
| 3. | திரு.இ.தர்மரட்ணம் | புவியியல் |
| 4. | திருமதி.தி.கணேசமூர்த்தி | விஞ்ஞானம் |
| 5. | திருமதி.ந.தங்கராசா | சைவசமயம் |
| 6. | செல்வி.சி.மாலதி | ஆரம்பக்கல்வி |
| 7. | திருமதி.மே.சாள்ஸ் | தமிழ் |
| 8. | திரு.ஞா.காண்டீபன் | ஆங்கிலம் |
| 9. | திரு.ம.சயந்தறூபன் | சுகாதாரமும் உடற்கல்வியும் |
| 10. | திருமதி.ஜெ.முகுந்தன் | சங்கீதம் |
| 11. | திருமதி.சி.ஞானசேகரன் | ஆரம்பக்கல்வி |
| 12. | திரு.சி.கர்ணன் | வரலாறு |
| 13. | செல்வி.ஜெ.அனுசா | நடனம் |
| 14. | திருமதி.சு.பாலேஸ்வரன் | ஆரம்பக்கல்வி |
| 15. | திருமதி.பா.சுப்பிரமணிய சிவம் | ஆரம்பக்கல்வி |
| 16. | திரு.க.சாந்தகுமார் | கணிதம் |
| 17. | திருமதி. பா. பிரபாகரன் | விஞ்ஞானம் |
| 18. | திரு.பொ.நாகேந்திரா | ஆங்கிலம் |

# பகுதி நேர ஆசிரியர் குழாம்

| | | |
|---|---|---|
| 1. | திரு.ச.சிவலிங்கம் | கணினி |
| 2. | திரு.சா.தயானந்தன் | சித்திரம் |
| 3. | திருமதி.மே.ரமேஸ்குமார் | மனையியல் |

# துணை ஆளணியினர்

| | | |
|---|---|---|
| 1. | செல்வி.பு.சசிகலா | இரண்டாம் மொழி கற்றல் அனுசரணையாளர் |
| 2. | திரு.இ.பகீரதன் | சுகாதாரத் தொழிலாளி |
| 3. | திரு.ச.கஜதீபன் | இரவுக்காவலாளி |

**இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள்**

- திருமதி.க.ஜெகதீஸ்வரன்
- திரு.செ.ஜெயகாந்தன்
- செல்வி.சூ.மரிய அஞ்சலா
- திரு.வை.சங்கர்ராஜ்
- திரு.பா.ஸ்ரீபாலன்

**எமது பாடசாலையிலிருந்து அதிபர் பதவிக்கு தெரிவாகிய ஆசிரியர்கள்**

- திரு.க.கலியுகன்
- திரு.லோ.விஜேந்திரன்

**கற்றலுக்காக கடமை லீவில் விடுவிக்கப்பட்டோர்.**

- திரு.கு.திலீபன் - (SLPS)
- திரு.கா.குமாரபரன் - ஆசிரியர்

**பாடசாலை அபிவிருத்திக் குழு**

தலைவர் : திரு.கா.ரவீந்திரராசா

**ஆசிரிய பிரதிநிதிகள்**

திருமதி.சி.நந்தகுமார்

திருமதி.தி.கணேசமூர்த்தி

திரு.சி.கர்ணன்

திரு.ஞா.காண்டீபன்

திருமதி.M.F.சாள்ஸ்

பெற்றோர் பிரதிநிதிகள்

திருமதி.இ.யோகராணி

திருமதி.கு.ரஞ்சனாதேவி

திருமதி.பி.தவனேஸ்வரி

திருமதி.த.லூசியா

**பழைய மாணவ பிரதிநிதிகள்**

திரு.கு.றஜீவன்

திருமதி.A.P.விக்டோரியா

**வலயப் பிரதிநிதி**

திரு.ரி.சிவகுமார்

**பாடசாலை பழைய மாணவர் சங்கம்**

தலைவர் - திரு.கா.ரவீந்திரராசா

உபதலைவர் - திரு.க.ஜெயச்சந்திரன்

செயலாளர் - திரு.ஆ.தயாகரன்

பொருளாளர் - திரு. சி. கர்ணன்

**பாடசாலை பழைய மாணவர் சங்கம்**

தலைவர் : திரு.கா. ரவீந்திரராஜா - அதிபர்

உபதலைவர் : திரு.க.ஜெயச்சந்திரன்

செயலாளர் : திரு.ஆ.தயாகரன்

உபசெயலாளர் : திரு.கு.றஜீவன்

பொருளாளர் : திருமதி.ச.ரவீந்திரன்

உறுப்பினர்கள் : திருமதி.சி.நந்தகுமார்

திருமதி.தி.கணேசமூர்த்தி

திரு.க.கலியுகன்

திரு.இ.ராஜ்கரன்

திரு.க.விஜயகாந்தன்

திரு.விதுசன்

திரு.S.பிரான்சீஸ்

திரு.விஜயபாலன்

திருமதி.எ.விக்ரோறியா

திருமதி.அ.கலா

செல்வி.சுகிர்தா

திருமதி.சிவசக்தி

செல்வி.நளினி

செல்வி.சுரேக்கா

செல்வி.தர்சிவா

செல்வி.தே.டிலானி

# முகாமைத்துவ குழு-2016



# ஒழுக்காற்றுக் குழு -2016



# மாணவர் முதல்வர் சபை -2016



## ஆங்கில மன்றம் 2016



## முத்தமிழ் மன்றம் 2016



# கணித விஞ்ஞான மன்றம்-2016



# கவின் கலை மன்றம்-2016



# கிறீஸ்தவ மன்றம் 2016



# இந்துமா மன்றம் 2016



## சமூக விஞ்ஞான மன்றம்-2016



## அனர்த்த முகாமைத்துவக் குழு -2016



# உடலாளர் மன்றம்-2016



# சகபாடி மத்தியஸ்தர் சபை-2016



# தகவல்த் தொடர்பாடல் மன்றம்-2016



# சுகாதார மன்றம் -2016



2016ஆம் ஆண்டிற்கான மாணவத் தலைவர்களுக்கான
சின்னம் சூட்டலின் போது



2016ஆம் ஆண்டிற்கான வகுப்புத் தலைவர்களுக்கான
சின்னம் சூட்டலின் போது



## 2016ஆம் ஆண்டிற்கான இல்ல மெய்வல்லுனர் போட்டியின்போது பிரதம விருந்தினர் அவர்கள்



## 2016ல் கல்விச்சுற்றுலாவின் போது காலியில் ஆசிரியர்களும் மாணவர்களும்



2015 புலமைப்பபரிசில் பரீட்சையில் சித்தியடைந்த
மாணவி கி.நிதுஷாவுடன்
பொறுப்பாசிரியர் செல்வி சி.மாலதி,அதிபர்,பிரதியதிபர்



2016 ஆங்கில தின உறுப்பெழுத்துப் போட்டியில்
கோட்ட மட்டத்தில முதலாம் இடம் பெற்ற
மாணவி ற.சுவியுடன்
பொறுப்பாசிரியர் திரு ஞா.காண்டீபன்,அதிபர்,பிரதியதிபர்



# செயற்பட்டு மகிழ்வோம் தரம் -4
# கோட்டமட்டம் மூன்றாம் இடம்



# கல்வி சாரா ஊழியர்கள்



# 2015ல் சிறந்த ஆசிரியருக்கன

## பிரதீபா பிரபா விருதினைப்பெறும்

## எமது ஆசிரியர் திருமதி.தி.கணேசமூர்த்தி அவர்கள்



## இலங்கை அதிபர் சேவை தரம் III இல்

## உள்வாங்கப்பட்ட எமது ஆசிரியர்கள்

## திரு.க.கலியுகன்.திரு.லோ.விஜேந்திரன்




**எதிர்கால நோக்கு**

- எழுத, வாசிக்க இடர்படும் மாணவர்களின் நிலையினை மாற்றுதல்
- பெற்றோருக்கு கல்வியில் விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
- ஒழுக்கசீலரான மாணவமணிகளை உருவாக்கல்
- e- learning முறையில் கற்பித்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
- நூலகத்தை நவீன முறையில் வடிவமைத்துப் பயன்படுத்தல்.
- மெய்வல்லுனர் நிகழ்வில் தேசிய மட்டத்தில் பதக்கம் பெறுதல்

**பாடசாலைத் தேவைகள்**

- நூலகத்திற்கான நூல்களும் தளபாடங்களும்
- டிஜிற்றல் முறையிலான காட்சிப்படுத்தல் வசதிகள்
- விளையாட்டு மைதானம்.
- கணனிகளும் கணனி அறை நவீனமயப்படுத்தலும்.
- உள்ளக , வெளியக விளையாட்டு உபகரணம்.
- அலவலகத்தை நவீன முறையில் வடிவமைத்தல்
- வாகன பாதுகாப்பிடம்
- சிற்றுண்டிச்சாலை, ஆசிரயர் ஓய்வறை என்பன அமைத்தல்
- பாடரீதியான மடிக் கணினிகள்
- நூலகம், கணினி அறைகளுக்கு நிலத்தை மாபிளாக மாற்றுதல்

**மனம் கனிந்த நன்றி**

நவீன யுகத்திற்கு அமைய மாறிவரும் புதிய உலகத்தின் சவால்களை எதிர் கொள்ளும் வகையில் மாணவர்களின் உள்ளார்ந்த ஆற்றல்களை விருத்தி செய்து சமூக இயைபாக்க முடையவர்களாக வளர்த்தெடுத்து புதிய சமூதாயத்தை உருவாக்குதல் என்ற வாசகத்திற்கு அமைவாக எமது மாணவரின் கல்விச் செயற்பாடுகளைப் படிப்படியாக முன்நகர்த்திச் செல்கின்றோம். இந்த மாற்றத்திற்கு காரணமான அன்புள்ளம் கொண்ட நீங்கள் ஒவ்வொருவரும் கொடுத்து வரும் பங்களிப்பும் ஒத்துழைப்புமே காரணம் என்றால் மிகையாகாது.

இதன் வெளிப்பாடாக இன்றைய மகத்தான பரிசளிப்பு விழாவிற்கு முதன்மை விருந்தினராக வருகைதந்து மகிழ்வித்த திரு.ச. ரவிஅவர்களுக்கும் அவர்தம் பாரியார் திருமதி. ஷைலா ரவி அவர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் கோட்டக்கல்வி விப்பணிப்பாளர் திரு.*F.X.* அன்ரன் அவர்களுக்கும் பாடசாலை சமூகம் சார்பாக நன்றியை தெரி வித்துக் கொள்கின்றோம். கௌரவவிருந்தினர்களாக வருகை தந்திருக்கும் திரு. சி. ஜெயகாந்தன், திரு. சி. மகேந்திரராசா, திரு க. கலியுகன். திரு. லோ. விஜேந்திரன் அவர்களுக்கும் அவர்கள் தம் உறவினர்களுக்கும் பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவியும் ஒத்தாசையும் வழங்கிய பழையமாணவ சங்கத் தினருக்கும், அபிவிருத்தி சங்கத்தினருக்கும் தாங்கள் வாழும் இடத்தில் சங்கங்களை அண்மைக் காலத்தில் அமைத்து தாமாக முன்வந்து பெருவிருப்புடன் பாடசாலைக்கான தேவை களை நிறைவேற்றி வருகின்றனர். அவர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதேவேளை எமது பாடசாலைக்கு தேவை அறிந்து நிதியுதவி வழங்கும் ஆசிரியர்கள், ஆசிரிய உறவினர்கள், நலன்விரும்பிகள், புலம்பெயர் பழைய மாணவர்கள் இலங்கை யில் வாழும் பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், எல்லாவற்றுக்கும் மேலாக எமது அன்புள்ளம் கொண்ட பெற்றோர்கள் யாவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் எமது அழைப்பை ஏற்று வருகை தந்த கோட்டக் கல்விப்பணிப்பாளர், உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், சேவைக்காலஆசிரிய ஆலோசகர்கள் அயற் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் யாவருக்கும் எமது நன்றிகள்.

**அதிபர்**

# பரிசில் பெறும் மாணவர் விபரம்

**ஆரம்பக்கல்வியில் பரிசில் பெறுவோர்.**

| இல | தரம் | மாணவர் பெயர் | பரிசு பெறும் பாடங்கள் |
|---|---|---|---|
| 1 | 1 | பி. கையிலாஷ் | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல் |
| 2 | 2 | பா. நீருஜா | தமிழ், சமயம், கணிதம் |
| 3 | 2 | பா. சுபானுஜா | கிறிஸ்தவ சமயம் |
| 4 | 2 | ஜெ. காவேரி | சுற்றாடல் |
| 5 | 3 | பி. ஜீவிதன் | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம் |
| 6 | 3 | பி. பிரவீனா | கிறிஸ்தவ சமயம் |
| 7 | 4 | ச. சகீசன் | தமிழ், சமயம் |
| 8 | 4 | சா. வினுசன் | கணிதம், சுற்றாடல் |
| 9 | 4 | சி. லாமதி | ஆங்கிலம், கிறிஸ்தவ சமயம் |
| 10 | 5 | கி. நிதுஜா | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம் |

**இடைநிலைப்பிரிவில் பரிசில் பெறுவோர்**

| இல | தரம் | மாணவர் பெயர் | பரிசு பெறும் பாடங்கள் |
|---|---|---|---|
| 1 | 6 | க. அதிஸ்ரன் | சைவ சமயம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், வாழ்க்கைத் தேர்ச்சியும், குடியுரிமைக்கல்வியும் |
| 2 | 6 | க. தெபோராள் | தமிழ், கிறீஸ்தவம் |
| 3 | 6 | சி. தனுசன் | கணிதம், ஆங்கிலம் |
| 4 | 6 | க. சுகந்தி | நடனம் |
| 5 | 6 | இ. நவீனா | செய்முறைத் தொழிநுட்பம் |
| 6 | 6 | வி. நிதுசன் | சித்திரம் |
| 7 | 7 | க. லக்சிகா | சைவசமயம், புவியியல், சுகாதாரமும், உடற்கல்வியும் |

| இல | தரம் | மாணவர் பெயர் | பரிசு பெறும் பாடங்கள் |
|---|---|---|---|
| 1 | 6 | க. அதிஸ்ரன் | சைவ சமயம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், வாழ்க்கைத் தேர்ச்சியும், குடியுரிமைக்கல்வியும் |
| 2 | 6 | க. தெபோராள் | தமிழ், கிறீஸ்தவம் |
| 3 | 6 | சி. தனுசன் | கணிதம், ஆங்கிலம் |
| 4 | 6 | க. சுகந்தி | நடனம் |
| 5 | 6 | இ. நவீனா | செய்முறைத் தொழிநுட்பம் |
| 6 | 6 | வி. நிதுசன் | சித்திரம் |
| 7 | 7 | க. லக்சிகா | சைவசமயம், புவியியல், சுகாதாரமும், உடற்கல்வியும் |
| 8 | 7 | செ. றஞ்சிதா | சைவ சமயம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், வாழ்க்கைத் தேர்ச்சியும், குடியுரிமைக்கல்வியும் |
| 9 | 7 | க. டானியல் | வரலாறு, சித்திரம் |
| 10 | 8 | கி. சாருசன் | சைவ சமயம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், வாழ்க்கைத் தேர்ச்சியும், குடியுரிமைக்கல்வியும் |
| 11 | 8 | க. நதீபா | வரலாறு |
| 12 | 8 | சா. விதுசா | வாழ்க்கைத்தேர்ச்சியும், குடியுரிமைக் கல்வியும் |
| 13 | 8 | அ. ஜெகப்பிரியன் | கிறீஸ்தவம் |
| 14 | 9 | வி. சஜித்தன் | ஆங்கிலம் கணிதம், சித்திரம், விஞ்ஞானம்,, புவியியல், சுகாதாரமும் உடற்கல்வியும், செய்முறைத் தொழில்நுட்பம் |
| 15 | 9 | க. டனிசியா | தமிழ், சைவசமயம்,வரலாறு, வாழ்க்கைத்தேர்ச்சியும் குடியுரிமைக்கல்வியும் சங்கீதம் |

| | | | |
|---|---|---|---|
| 16 | 9 | அ. ஜெஷீரன் | கிறீஸ்தவம் |
| 17 | 9 | ர. ஜோதிகா | நடனம் |
| 18 | 10 | கி. நிதர்சன் | தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், புவியியல் |
| 19 | 10 | செ. சசிகலா | சைவசமயம், வரலாறு, சங்கீதம், சுகாதாரம், குடியுரிமைக்கல்வி |
| 20 | 10 | நொ. டயானி | கிறிஸ்தவம் |
| 21 | 10 | நதீபன் | விவசாயம் |
| 22 | 10 | வி. அனோஜிகா | மனையியல் |

**பரிசில் தின நிகழ்விற்கு உதவியோர்**

செல்வி. சி. மாலதி (ஆசிரியர்)
செல்வி. இராஜகலசிங்கம் ராகவி (நலன் விரும்பி)
செல்வி வாகினி மோகனகுமார் (நலன் விரும்பி)
திருமதி ரதி யோகச்சந்திரன் (நலன் விரும்பி)
திருமதி. இந்திரா நல்லையா (நலன் விரும்பி)
திரு. செ. ஜெயகாந்தன் (அதிபர்)
திரு. சி. மகேந்திரராஜா (அதிபர்)
திரு. க. கலியுகன் (அதிபர்)
திரு. லோ.விஜேந்திரன் (அதிபர்)
திருமதி. சு. பாலேஸ்வரன் (ஆசிரியர்)
திரு. ம. சயந்தறூபன் (ஆசிரியர்)
திரு. பொன். நாகேந்திரா (ஆசிரியர்)
திருமதி ந. தங்கராசா (ஆசிரியர்)
திரு. ஞா. காண்டீபன் (ஆசிரியர்)

**2015ம் ஆண்டில் க. பொ. த சாதாரண தரத்தில் சித்தி பெற்ற உயர்தரம் கற்போர்**

1. எ. விஜேந்தன்
2. பி. ஜெனிஸ்ரலா
3. இ. றொசானா
4. ந. டினுசன்
5. ர. ரசிந்தினி
6. கே. ரியானா

## வரவு ஒழுங்கு -2015

| இல | தரம் | மாணவர் பெயர் |
|---|---|---|
| 1 | 1 | S. வேணியன் |
| 2 | 2 | சு. நீருஜா |
| 3 | 3 | தி. டனிஷன் |
| 4 | 3 | ஜெ. ஜெனிஸ்ரன் |
| 5 | 4 | சு. சுமித்திரா |
| 6 | 5 | கி. நிதுஜா |
| 7 | 6 | க. சுகந்தி |
| 8 | 7 | உ. வினுஷ்ரிகா |
| 9 | 8 | கி. சாருஜன் |
| 10 | 9 | ர. ஜோதிகா |
| 11 | 9 | அ. தர்சன் |
| 12 | 10 | கி. நிதர்சன் |

# மெய்வல்லுநர் போட்டியின் சாதனையாளர்கள்

## கோட்டமட்டம்

| இல | மாணவர் பெயர் | வயதுப் பிரிவு | நிகழ்ச்சி |
|---|---|---|---|
| 1 | கு. டனுசியா | 17 | குண்டு போடுதல், 200m |
| 2 | செ. சசிகலா | 17 | ஈட்டி எறிதல், தட்டெறிதல் |
| 3 | க. லக்சிகா | 15 | 400m, 200m |
| 4 | சி. சிலோஜா | 13 | நீளம் பாய்தல், 200m |
| 5 | க. டானியல் | 15 | தட்டெறிதல் |
| 6 | ஜெ. ஜெனதீபா | 17 | 400m, 800m |
| 7 | ற. றஞ்சிதா | 15 | தட்டெறிதல் |
| 8 | குழு | 17 | அஞ்சல் பெண் 4 X 100 m |
| 9 | குழு | 13 | அஞ்சல் பெண் 4 X 100 m |
| 10 | குழு | 13 | அஞ்சல் பெண் 4 X 100 m |

தரம் 4 செயற்பட்டு மகிழ்வோம் 3ம் இடம்

## வலயமட்டம்

| இல | மாணவர் பெயர் | வயதுப் பிரிவு | நிகழ்ச்சி |
|---|---|---|---|
| 1 | சி. சிலோஜா | 13 | நீளம் பாய்தல் (1ம் இடம்) |
| 2 | க. லக்சிகா | 15 | 400m (2ம் இடம்) |
| 3 | செ. சசிகலா | 17 | ஈட்டி எறிதல் (2ம் இடம்) |

## இணைப்பாடவிதான சாதனையாளர்கள்

1 ற. சுவி ஆங்கில உறுப்பெழுத்து 1ம் இடம் (கோட்ட மட்டம்)

2. அ. ஜெமீமா தமிழ்த்தினம் தனி நடனம் 3ம் இடம் (கோட்ட மட்டம்)



# பாடசாலைக் கீதம்

வாழ்க என்றும் வாழ்கவே
உயரப்புலம் மெதடிஸ் மிசன்
தமிழ் கலவன் வித்தியாலயம்
கனிந்த நல்ல பார்வையும்
கமலமென்ன வதனமும்
கடமைபோற்றும் எண்ணமும்
மனதில் நல்ல உறுதியும்
உள்ளமெங்கும் இலட்சியம்
உயர்ந்த நோக்கத் திண்ணமும்
அள்ள அள்ளக் குறைவிலாத அறிவை
ஊற்று நிலையமாம்
அன்பினாலே ஆழவைக்கும்
அரிய சமய நீதியும்
இன்ப வாழ்வு பொங்கும் வண்ணம்
இனிய கலை விஞ்ஞானமும்
சிந்தை நாடும் சரித்திரம்
சிறந்த நுட்ப நெறிகளும்
தந்தெமக்கு இன்பம் நல்கும்
இனிய கலைப் பீடமாம்
வாய்மை தூய்மை நியாயமும்
வாழ்வில் நீதி நேர்மையும்
பண்பொழுக்கம் அறிவுடன் அன்பு
தியாக சீலமும்
பொங்கு முடல் இளமைநலம்
உடற் பயிற்சி யாவுமே
மேற்மைகொண்டு எழிக்களிக்கும்
மிளிரும் வித்தியாலயமாம்